கும்பகோணம் நகராட்சி 150வது ஆண்டு

2014ம் ஆண்டின் சிறந்த நகராட்சி – முதல் பரிசு

# கும்பகோணம் நகர்மன்றம்

## சாதாரணக் கூட்டம்

## நாள் : 31.07.2018

# 31.07.2018ம் தேதிய நகர்மன்ற சாதாரண கூட்ட பொருள்கள்

| வ.எண் | பொருள்கள் – ஜீலை 2018 | தீர்மானம் எண் |
|---|---|---|
| 1. | இந்நகராட்சியின் 2017–2018ம் ஆண்டின் நிர்வாக அறிக்கை தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்.89** பதிவு செய்யப்பட்டது. |
| 2. | இந்நகராட்சியில் 1 முதல் 45 வார்டுகளில் உள்ள சொத்துவரி, காலிமனைவரி, தண்ணீர் கட்டணம், தொழில்வரி, பாதாள சாக்கடை கட்டணம் மற்றும் வரியில்லா இனங்கள் 2018–19 மற்றும் 2019–20 ஆண்டுக்கான கேட்பு அறிக்கைகள் கணினியில் நகல் எடுப்பதற்கும், கேட்பு பதிவேடு மற்றும் அடங்கல் தயார் செய்வதற்கும் உத்தேச செலவினம் ரூ.2.50 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு. | **தீர்மான எண்.90** அனுமதி வழங்கப்பட்டது. |
| 3. | நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க.எண்.12503/2018/ஆர்1, நாள்.21.05.2018 கடிதத்தில் அறிவுறுத்தியவாறும் 1920 ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு.124டி–ன்படியும் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை நகர்மன்றத்தால் தொழில்வரி சீராய்வு செய்யப்பட்டு ஏற்கனவே நடைமுறையில் உள்ள வரிவிகிதத்தில் 25 சதவீதத்திற்கு குறையாமலும் 35 சதவீதத்திற்கு மிகாமலும் உயர்வு செய்ய வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்நகர்மன்ற 31.05.2018 ஆம் தேதிதி நகர்மன்றம் தீர்மானம் எண்.42ல் 01.10.2018 முதல் தொழில்வரியை 35 சதவீதம் உயர்வு செய்ய மன்றம் அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி பொதுமக்களும், கும்பகோணம் நகரில் தொழில்புரிவோரும் நன்கு அறியும் வண்ணம் 17.06.2018 ஆம் தேதிய மாலைமலர் நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்டது. நாளிதழில் பிரசுரம் செய்து 30 தினங்களுக்குள் ஆட்சேபனைகள் கோரப்பட்டதில் ஆட்சேபனைகள் எதுவும் வரப்பெறவில்லை என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்.91** பதிவு செய்யப்பட்டது. |
| 4. | இந்நகராட்சி வார்டு எண்.19, வரிவிதிப்பு எண்.16826, துக்காம்பாளையத்தெரு, கதவு எண்.70/671 கட்டிடத்திற்கு ஜி.லெட்சுமி பெயரிலிருந்து ஆர்.ஆறுமுகம் பெயருக்கு பெயர்மாற்றம் (பெ.மா.வி.எண்.188/15/அ3) செய்ததனை எதிர்த்து திருமதி.ஜி.லெட்சுமி என்கிற காளியம்மாள் க/பெ.ஆர்.குணசேகரன் என்பவர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு தொடரப்பட்டு வழக்கு எண்.WP(MD) No.7080/18 என்ற வழக்கு நடைபெற்று வருவதால் வழக்கறிஞர் திரு.எம்.ராஜராஜன் என்பவருக்கு வழக்கறிஞர் கட்டணமாக ரூ.**10,000/–** வழங்க மன்றம் அனுமதிக்கு. | **தீர்மான எண்.92** அனுமதி வழங்கப்பட்டது. |
| 5. | இந்நகராட்சியின் பொதுசுகாதார பிரிவு பராமரிப்பு வாகனம் TN.49.T.3924 டம்பர் பிளேசர் வாகனத்தின் தகுதிசான்றுக்கான கால அவகாசம் நிறைவடைவதால், அவ்வாகனத்தின் பழுதுகளை சரிசெய்து தகுதிச்சான்று பெறவும், அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.95,000/– பொருள் வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்.93** அனுமதி அளிக்கப்பட்டது. |
| 6. | கும்பகோணம் நகராட்சியின் பொதுசுகாதார பிரிவு பராமரிப்பு வாகனம் TN.68.P.8526 வாகனம் பேட்டரி பழுதடைந்துள்ளதால் அதனை சரிசெய்து இயக்கும் பொருட்டு, விலைப்புள்ளி பெற்று புதிய பேட்டரி வாங்கவும் அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.9000/– (ஒன்பதாயிரம் மட்டும்) அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்.94** அனுமதி அளிக்கப்பட்டது. |
| 7. | இந்நகராட்சியின் பொதுசுகாதார பிரிவு பராமரிப்பு வாகனம் TN.68.F.5729 வாகனத்தின் பின்பக்க டயர் தேய்ந்து உள்ளது. அவ்வாகனத்தின் டயர்கள் இரண்டு ரீட்டிரேட் (புதுப்பித்தல்) செய்யவும் அதற்குண்டான செலவினம் ரூ.6000/–க்கு (ஆறாயிரம் மட்டும்) பொருள் அனுமதிக்காக வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்.95** அனுமதி அளிக்கப்பட்டது. |
| 8. | இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவு பராமரிப்பு வாகனம் TN.49.T.3929 டம்பர் பிளேசர் வாகனத்தின் தகுதி சான்று பெறவேண்டிய காலம் நிறைவடைவதால், அவ்வாகனத்தின் பழுதுகளை சரிசெய்து தகுதிசான்று பெறுவதற்காகவும், அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.95000/–க்கு மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்.96** அனுமதி அளிக்கப்பட்டது. |
| 9. | இந்நகராட்சியின் பொதுசுகாதார பிரிவு பராமரிப்பு வாகனம் TN.49.AX.1293 TATA ACE வாகனத்தின் பழுது நீக்கம் செய்து தகுதிசான்று பெறவேண்டிய கால அவகாசம் நிறைவடையும் நிலையில் உள்ளது. எனவே அவ்வாகனத்தின் பழுதுகளை சரிசெய்து, தகுதிசான்று பெறவும், அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.50,000/–க்கு அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்.97** அனுமதி அளிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 10. | இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவு பராமரிப்பு வாகனம் TN.49.T.3929 டம்பர் பிளேசர் வாகனத்தின் டயர் டியூப் மிகவும் பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதால் மேற்படி வாகனத்திற்கு தேவையான டயர்கள், டியூப், பிளாப்–6 எண்ணிக்கை வாங்கவும், அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.54000/–க்கு பொருள் வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்.98** அனுமதி அளிக்கப்பட்டது. |
| 11. | இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவு பராமரிப்பு வாகனம் TN.49.T.3925 வாகனத்தின் டயர், டியூப் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால், டயர், டியூப் வாங்கி கொள்ளவும், அதற்குண்டான செலவினம் ரூ.50000/– (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்.99** அனுமதி அளிக்கப்பட்டது. |
| 12. | இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவு பராமரிப்பு வாகனம் TN.49.T.3927 வாகனத்தின் பழுதுகள் நீக்கம் செய்து தகுதிசான்று பெறும் பொருட்டு, வட்டார போக்குவரத்து அலுவலரால் வாகனத்தின் முன், பின் இரண்டு பக்கமும், பம்பர் வைக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் அவ்வாகனத்திற்கு பம்பர் பொருத்த நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.8000/– (ரூபாய் எட்டாயிரம் மட்டும்) அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்.100** அனுமதி அளிக்கப்பட்டது. |
| 13. | இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டு வரும் வாகனங்களுக்கு எரிபொருள் அளவினை கட்டுப்படுத்தும் பொருட்டு GPRS–கருவி பொருத்தப்பட்டுள்ளதனை புதுப்பிக்கவும் (GPS - Renewal) மேலும், AIRTEL நிறுவனத்திற்கு மாதாந்திர பட்டியல் தொகை 2018–19ம் ஆண்டிற்கு செலுத்தவும் அதற்குண்டான உத்தேச ரூ.75,000/–க்கு (ரூபாய் எழுபத்தைந்தாயிரம் மட்டும்) பொருள் வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்.101** அனுமதி அளிக்கப்பட்டது. |
| 14. | இந்நகராட்சியின் பொதுசுகாதார பணிக்கு தேவையான கிருமி நாசினி பொருட்களான நீர்த்த சுண்ணாம்பு, பிளீச்சிங் பவுடர் அவசர அவசியம் கருதி, இருப்பு இல்லாத காரணத்தால் அரசு நிர்ணயித்த விலை விகிதத்தில் அரசு அங்கீகார நிறுவனமான TANSIDCO LTd., தஞ்சாவூர் நிறுவனத்தாரிடம் நீர்த்த சுண்ணாம்பு – 5000 கி.கி, பிளீச்சிங் பவுடர் – 3000 கி.கி, கொள்முதல் செய்யவும், அதற்குண்டான உத்தேச செலவினத்திற்கும் மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்.102** அனுமதி அளிக்கப்பட்டது. |
| 15. | இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவு பராமரிப்பு வாகனங்களான காம்பேட்டர் லாரி, டம்பர் பிளேசர் லாரி, டிப்பர் லாரி, டாடா ஏஸ், JCB, டோசர், செயின் டோசர், டெரக்ஸ் போன்ற வாகனங்களில் அவ்வப்பொழுது பழுதுகள் ஏற்படுவதால், இயக்கி பராமரிப்பதில், சிரமமாக உள்ளதால் அவ்வப்பொழுது ஏற்படும் சிறு பழுதுகளை அவசர அவசியம் கருதி சரிசெய்யும் பொருட்டு உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணி உத்தரவு வழங்கி பணி மேற்கொண்டு வாகனங்களை இயக்கவும், ஓராண்டு காலத்திற்கான உத்தேச செலவின தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்.103** அனுமதி அளிக்கப்பட்டது. |
| 16. | இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தனிநபர் கழிவறை இல்லாதவர்களுக்கு தனிநபர் கழிவறை கட்டுவதற்கான வழிவகை அரசாணை (நிலை) எண்.105, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி.உ) நாள்.21.7.15ல் ஆணையிடப்பட்டுள்ளது. அரசாணை நகர்மன்ற தீர்மானம் எண்.1137, நாள்.29.9.2015ல் நகர்மன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி அரசாணையில் மத்திய அரசு மானியம் ரூ.4000/–ம் , மாநில அரசு மானியம் ரூ.2000/–மும், உள்ளாட்சி அமைப்பு ரூ.2000/–மும், பயனாளியின் பங்களிப்பாக ரூ.4000/–ம் என வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், இப்பணியினை மேற்கொள்ள தற்போதுள்ள விலை விகிதத்தின் அடிப்படையில் ஒரு தனிநபர் கழிப்பிடத்திற்கு ரூ.2,200/– வீதம் கூடுதல் செலவினம் மேற்கொள்ள வேண்டியுள்ளது என உதவி பொறியாளர்களால் குறிப்பு பெறப்பட்டுள்ளது. எனவே இம்மிகை செலவினத்திற்கான ICICI வங்கியிலிருந்து வழங்கிய CSR-Fund தொகையிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்.104** அனுமதி அளிக்கப்பட்டது. |
| 17. | கும்பகோணம் நகராட்சி வார்டு எண்.04, பிளாக் எண்.08, நகரளவு எண்.579, ஏ.ஆர்.ஆர் ரோட்டில் 720 ச.மீ பரப்பளவு கொண்ட மனையிடத்தில் ஸ்டில்ட் தளம், முதல் தளம், இரண்டாம் தளம் கூடிய 10 குடியிருப்புகள் கொண்ட குடியிருப்புக் கட்டுமானத்திற்கு திட்ட அனுமதி வேண்டி 15.72ச.மீ பரப்பளவு உள்ள இடத்தினை | **தீர்மான எண்.105** அனுமதி வழங்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | நகராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்ய திரு.எஸ்.கோவிந்தராஜ் மற்றும் ஜி.சுமதி என்பவர் சம்மதம் தெரிவித்துள்ளார். மேற்படி சாலை விஸ்தரிப்பிற்கான பகுதியினை தானமாகப் பெற்றுக் கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | |
| 18. | இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள ஸ்டேட் பேங்க் காலனி பூங்கா மற்றும் பொன்னுசாமி நகர் பூங்காக்களில் உதிரும் குப்பைகளை அந்தந்த இடத்திலேயே உரமாக்கும் வகையில் மேற்கண்ட இரண்டு பூங்காக்களிலும் On site compost pit தொட்டி கட்டி அதன் மேல் புறம் ஷெட் அமைக்கும் பணிக்கு வருவாய் நிதியின்கீழ் ரூ.1.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு அனுமதிக்கு. | **தீர்மான எண்.106**<br>அனுமதி அளிக்கப்பட்டது. |
| 19. | இந்நகராட்சி பொறிியல் பிரிவில் MUDF திட்டத்தின் கீழ் தற்காலிக தொழில் நுட்ப உதவியாளராக பணிபுரிந்து திட்டப் பணிகள் முடிவடைந்ததால் 01.04.98 முதல் பணியிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்ட ஆர்.ஸ்டாலின் ஜோசப் ராஜ் அவர்கள் கடலூர் தொழிலாளர் நீதிமன்றத்தில் வழக்கு எண் 56/36 தொடர்ந்து அன்னாருக்கு சாதகமாக தீர்ப்பு பெற்றதால் அதனை எதிர்த்து நகராட்சியால் சென்னை உயர் நீதி மன்றத்தில் மேல் முறையீட்டு வழக்கு எண் W.P. 19020/2003ல் மேல் முறையீடு செய்யப்பட்டு வழக்கு திரு.ஆர்.ஸ்டாலின் ஜோசப் ராஜ் அவர்களுக்கு 17(b) wagesஐ ஒரு வார காலத்திற்குள் வழங்க வேண்டும் என தீர்ப்பு வழங்கப்பட்டு உத்தரவு வரப்பட்டுள்ளது. எனவே, திரு.ஆர்.ஸ்டாலின் ஜோசப் ராஜ் அவர்களுக்கு கடலூர் தொழிலாளர் நீதிமன்றத்தில் ரூ.21420/– செலுத்தப்பட்டது. மேலும், சென்னை உயர் நீதிமன்ற மேல் முறையீட்டு வழக்கு எண் 19020/2003ன் மீது அப்பீல் செய்யப்பட்டது. மேல்முறையீட்டு அப்பீல் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவு வழங்கப்பட்டது. திரு.ஆர்.ஸ்டாலின் ஜோசப் ராஜ் மனைவி திருமதி.லீமாரோஸ் என்பவர் இந்நகர் மன்றத்தின் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்ந்துள்ளார். இந்நிலையில் மேற்படி வழக்கு தொடர்பாக அரசு வழக்கறிஞர் திரு.எம்.இராஜாராஜன், மதுரை உயர்நீதி மன்ற வழக்கறிஞரிடம் சட்டக் கருத்துரு பெறப்பட்டது. மேற்படி உயர்நீதி மன்ற மேல் முறையீட்டு மனு அப்பீல் தள்ளுபடி மற்றும் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு மீது தொடர்ந்து வழக்காடவும், வழக்கிற்கு ஆகும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. வழக்கிற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.50,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | **தீர்மான எண்.107**<br>அனுமதி அளிக்கப்பட்டது. |
| 20. | கும்பகோணம் நகராட்சி கரிக்குளத்தில் உள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் இயங்கிவரும் டைஜஸ்டரை பையோகேஸ் டைஜஸ்டராக மாற்றி அமைத்து உயிர் எரிவாயு தயாரித்து எரிபொருள் சிலிண்டர் தயாரித்திட உத்தேசிக்கப்பட்டு CLRI மூலம் விரிவான திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண். 19161/P3/2018 நீாள் 17.7.2018–ல் தேப்பெருமாநல்லூரில் உள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் இயங்கிவரும் டைஜஸ்டரை பையோகேஸ் டைஜஸ்டராக மாற்றி அமைத்து, உயிர் எரிவாயு தயாரித்து, சிலிண்டரில் அடைத்து விற்பனை செய்யும் பணியினை 10 ஆண்டுகளுக்கு DBFOT முறையில் முதலீடு செய்து அதன் மூலம் கிடைக்கும் வருவாயில் நகராட்சிக்கு பங்கு கொடுக்க முன் வரும் வகையில் விருப்பம் உள்ள நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெற அனுமதித்தும், இப்பணிக்கு ரூ.5.00 கோடிக்கு நிர்வாக அனுமதி வழங்கியும், பணிகளை மேற்பார்வையிட PMC நியமிக்கப்பட வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது மன்றத்தின் முடிவிற்கு. | **தீர்மான எண்.108**<br>அனுமதி வழங்கப்பட்டது. |
| 21. | இந்நகராட்சி புதிய அலுவலக கட்டிடம் கட்டும் பணிக்கு ரூ.500.00 இலட்சம் மூலதன மானியம் மற்றும் இயக்குதல் மற்றும் பராமரித்தல் இடைவெளி நிரப்பும் நிதி 2017–18 (CGF/O&M Gap Filling Fund 2017-18) . திட்டத்தின் கீழ் சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 06.03.2018ம் தேதிய ந.க.எண்.15040/2017/இ1 செயல்முறைகளில் கீழ்க்கண்ட விபரப்படி உத்தரவிடப் பட்டுள்ளது. | **தீர்மான எண்.109**<br>அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

| யின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை | மானியம் தொகை | 2017–18ம் ஆண்டு | 2018–19ம் |
|---|---|---|---|---|

| | | | | | ரூ. | மானியம் ரூ. | ஆண்டு மானியம் ரூ. | தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | (ரூபாய் இலட்சத்தில்) | | | | |
| 1 | | | வார்டு எண் 24, நகராட்சி காமராஜர் ஆய்வு மாளிகை அமைந்துள்ள திருவிடைமருதூர் ரோடு, நகரளவு வார்டு எண் 6, பிளாக் எண் 44, நகரளவு எண் 2177/1பாகம், 2177/2 பாகம் உள்ள இடத்தில் அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய நவீன அலுவலக கட்டிடம் கட்டும் பணி. | 500.00 | 450.00 | 100.00 | 300.00 | 50.00 |

இப்பணிக்கு தயார் செய்யப்பட்ட விரிவான திட்ட மதிப்பீடுகளுக்கு சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரக முதன்மை பொறியாளர் அவர்களின் **16.04.2018**ம் தேதிய ந.க. எண் **1041/2018**/DO2 செயல்முறைகளில் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு **29.05.2018** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

| ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டின்படி ஒப்பந்தத் தொகை 2017–18 SOR-ன்படி ரூ. | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | சதவீத விபரம் ரூ. |
|---|---|---|---|
| திரு.என்.சரவணன், கும்பகோணம் | **46843852** | **53651205.62** | மதிப்பீட்டை வி சதவிகிதம் அதி |
| திருவாளர்கள்.ஐடியல் இஞ்சினியரிங், அம்மாச்சத்திரம் | **46843852** | **55206458.72** | மதிப்பீட்டை வி சதவிகிதம் அதி |

இப்பணிக்கு மதிப்பீடுகள் 2017–18 SORன்படி தயார் செய்யப்பட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்ட மதிப்பீட்டு விலை விகிதத்தினைவிட மிகவும் கூடுதலாக உள்ள காரணத்தினால் மறுஒப்பந்தப்புள்ளி கோரப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இத்திட்டப் பணியினை உடன் முடித்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும் என்ற காரணத்தினாலும், **01.06.2018** முதல் **2018–19**–ம் ஆண்டிற்கு புதிய தரப்படுத்தப்பட்ட விலைப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளதாலும் புதிய விலை விகிதத்திற்கு ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புநோக்கம் செய்வதற்கு புதிய விலை விகிதத்தில் தயார் செய்யப்பட்ட DATA–க்கு சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரக முதன்மைப் பொறியாளர் அவர்களின் **11.7.2018**–ம் தேதிய ந.க.எண்.**2829/2016**/DO2 அனுமதி பெறப்பட்டது.

**2018–19**–ம் ஆண்டிற்கு புதிய தரப்படுத்தப்பட்ட விலைப் பட்டியல்படி ஒப்புநோக்கு பட்டியல் கீழ்க்கண்டவாறு:

| வரிசை எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டின்படி ஒப்பந்தத் தொகை 2018–189 SORன்படி ரூ. | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | சதவீத விபரம் ரூ. |
|---|---|---|---|---|
| **1** | திரு.என்.சரவணன், கும்பகோணம் | **51106102** | **53651205.62** | மதிப்பீட்டை விட **4.98** சதவிகிதம் அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | திருவாளர்கள்.ஐடியல் இஞ்சினியரிங், அம்மாச்சத்திரம் | 51106102 | 55206458.72 | மதிப்பீட்டை விட 8,02 சதவிகிதம் அதிகம் |

இத்திட்டப் பணியினை உடன் முடித்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும் என்ற காரணத்தினால், வரப்பெற்றதில் குறைவானதும், 2018–189 SORன்படி மதிப்பீட்டினை விட **4.98 %** கூடுதலாகவும் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ,திரு.என்.சரவணன், ஒப்பந்ததாரரிடம் இவ்வலுவலக ந.க.எண்.**2604/2018/இ2** நாள் **12.7.2018** , தேதிய கடிதத்தில் விலைக்குறைப்பு சம்மத கடிதம் கோரப்பட்டு அன்னாரிடமிருந்து கீழ்க்கண்ட விபரப்படி விலை குறைப்பு செய்து **16.7.18** கடிதம் பெறப்பட்டது.

| விலைக்குறைப்பு கடித விபரம் | 2018–19 SORன்படி விலைக்குறைப்பு சம்மத கடிதத்திற்கு பின்னர் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் (%) |
|---|---|---|
| முதலாவது விலைக்குறைப்பு கடிதம் நாள் . . ..7.2018 | 5,36,08,146.77 | மதிப்பீட்டை விட **4.90%** கூடுதல் |

மேற்கண்ட விபரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் ஒப்புதலுக்கு.

---

**22.**

இந்நகராட்சியால் பராமரிக்கப்படும் பிறப்பு மற்றும் இறப்பு பதிவேடுகள் மிக அதிக அளவில் பழுதடைந்த 495 எண்ணிக்கை பிறப்பு இறப்பு பதிவேடுகளை பைண்டிங் செய்ய 6.7.18ந் தேதி விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட விலைப்புள்ளிகள் பின்வருமாறு

| **வ.எண்** | **பெயர் மற்றும் முகவரி** | **தொகை** |
|---|---|---|
| 1. | என்.சந்தானம், உரிமையாளர் பாபு பைண்டிங் ஒர்க்ஸ் கோடீஸ்வரன் வடக்கு வீதி, கும்பகோணம் | பெரிய பதிவேடு 1க்கு ரூ.60/–<br>சிறிய பதிவேடு 1க்கு ரூ.40/– |
| 2. | லெட்சுமி பைண்டிங் கும்பகோணம் | பெரிய பதிவேடு 1க்கு ரூ.75/–<br>சிறிய பதிவேடு 1க்கு ரூ.50/– |
| 3. | அபிநயா பைண்டிங் ஒர்க்ஸ் கும்பகோணம் | பெரிய பதிவேடு 1க்கு ரூ.100/–<br>சிறிய பதிவேடு 1க்கு ரூ.75/– |

பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**தீர்மான எண்.110**
அனுமதி அளிக்கப்பட்டது.

---

**23.**

இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணிகள் நடைபெறுவது தொடர்பாக நகராட்சி நிர்வாக ஆணையரின் ஆய்வுக்கு சமர்ப்பிக்கும் பொருட்டு புகைப்படம் எடுக்கும் பொருட்டு அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி பெறப்பட்டவை தனி அலுவலரின் ஒப்புதலுக்காக பொருள் வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **நிறுவனத்தின் பெயர்** | **விலைப்புள்ளி** | |
|---|---|---|---|
| | | 12 x 8 அளவு ரூ | 6 x 4 அளவு ரூ |
| 1. | பிரசாத் டிஜிட்டல் ஸ்டுடியோ 13பி, கோதண்டபாணி தெரு, அன்னை வணிக வளாகம், கும்பகோணம் | 200 | 50 |

**தீர்மான எண்.111**
அனுமதி அளிக்கப்பட்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | சிவா ஸ்டீல்ஸ்<br>130, GSR பெரியதெரு, கும்பகோணம் | 230 | 55 | |

24. இந்நகராட்சி பொறியியல் பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் வாகனம் TN.49.AX.2929 பழுது நீக்க் 9.7.2018ல் விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் பார்வைக்கு.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | குறிப்பிடப்பட்ட தொகை ரூ. |
|---|---|---|
| 1. | Sai Cars Auto Works<br>Needamangalam Main Road<br>Sakkottai, Kumbakonam | 40,055/– |
| 2. | Viswa Car Cares<br>Mannargudi Main Road<br>Valangaiman | 44,610/– |
| 3. | SK Auto Works<br>Gowthameswarar Kovil Street<br>Kumbakonam | 49,750/– |

**தீர்மான எண்.112**
அலுவலககுறிப்பு ஏற்கப்பட்டது.

25. வருவாய் நிதியின்கீழ் நகர பேருந்து நிலையத்தில் பழுதடைந்துள்ள பொதுக் கழிவறையினை மராமத்து செய்யும் ரூ.4.90 இலட்சம் மதிப்பீட்டிலான பணிக்கு முதல் அழைப்பாக 27.06.2018 அன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டின்படி ஒப்பந்தத் தொகை ரூ. | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ. | சதவீத விபரம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | திருவாளர்கள். ஏ.பி.பில்டர்ஸ், கும்பகோணம் | 477151 | 476875 | மதிப்பீட்டை விட 0.06 சதவிகிதம் குறைவு |
| 2 | என்.சரவணன் கும்பகோணம் | 477151 | 506586 | மதிப்பீட்டை விட 6.17 சதவிகிதம் அதிகம் |

**தீர்மான எண்.113**
அலுவலககுறிப்பு ஏற்கப்பட்டது.

26. வார்டு எண் 18. பொற்றாமரை வடக்கு தெருவில் பழுதடைந் துள்ள பழைய மழைநீர் வடிகாலினை அகற்றி விட்டு புதியதாக மழைநீர் வடிகால் அமைக்கும் ரூ.4.75 இலட்சம் மதிப்பீட்டிலான பணிக்கு முதல் அழைப்பாக 27.06.2018 அன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டின்படி ஒப்பந்தத் தொகை ரூ. | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | சதவீத விபரம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | திருவாளர்கள். ஏ.பி.பில்டர்ஸ், கும்பகோணம் | 448074 | 447964 | மதிப்பீட்டை விட 0.02 சதவிகிதம் குறைவு |
| 2 | என்.சரவணன் கும்பகோணம் | 448074 | 473657 | மதிப்பீட்டை விட 5.71 சதவிகிதம் அதிகம் |

**தீர்மான எண்.114**
அலுவலககுறிப்பு ஏற்கப்பட்டது.

27. வார்டு எண் 18. பெரிய கடைத் தெருவிலிருந்து பொற்றாமரை கிழக்கு செல்லும் பழுதடைந்துள்ள பழைய மழைநீர் வடிகாலினை அகற்றி விட்டு புதியதாக மழைநீர் வடிகால் கட்டவும், மேலும் பெரிய கடைத் தெருவில் (வடக்கு–தெற்கு) உள்ள

**தீர்மான எண்.115**
அலுவலககுறிப்பு ஏற்கப்பட்டது.

பழுதடைந்துள்ள சிறுபாலத்தின் பக்க சுவர்களை சரி செய்து ஆர்.சி.சி. சிறுபாலம் அமைக்கும் ரூ.4.80 இலட்சம் மதிப்பீட்டிலான பணிக்கு முதல் அழைப்பாக 27.06.2018 அன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டின்படி ஒப்பந்தத் தொகை ரூ. | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | சதவீத விபரம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | திருவாளர்கள்.ஏ.பி.பில்டர்ஸ் கும்பகோணம் | 452594 | 452300 | மதிப்பீட்டை விட 0.06 சதவிகிதம் குறைவு |
| 2 | என்.சரவணன் கும்பகோணம் | 452594 | 481010 | மதிப்பீட்டை விட 6,28 சதவிகிதம் அதிகம் |

28. புறநகர் பேருந்து நிலையத்தில் சென்னை பயணிகள் பயன்படுத்தும் பழுதடைந்துள்ள பொதுக் கழிவறையினை மராமத்து செய்யும் ரூ.4.65 இலட்சம் மதிப்பீட்டிலான பணிக்கு முதல் அழைப்பாக 27.06.2018 அன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டின்படி ஒப்பந்தத் தொகை ரூ. | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளிதொகை ரூ. | சதவீத விபரம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | திருவாளர்கள். ஏ.பி.பில்டர்ஸ் கும்பகோணம் | 448847 | 448756 | மதிப்பீட்டை விட 0.02 சதவிகிதம் குறைவு |
| 2 | என்.சரவணன் கும்பகோணம் | 448847 | 480805 | மதிப்பீட்டை விட 7.12 சதவிகிதம் அதிகம் |

**தீர்மான எண்.116**
அலுவலககுறிப்பு ஏற்கப்பட்டது.

29. இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவு பராமரிப்பு வாகனம் TN.49.T.3925 வாகனத்தின் மின்கலம் பழுதடைந்துள்ளதனை புதிய மின்கலம் வாங்கும் பொருட்டு நகர்மன்ற தீர்மான எண்.450, நாள்.28.03.2018 அனுமதி பெறப்பட்டு, விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளி மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | கார்த்திக் பேட்டரி சென்டர்<br>21, நாகேஸ்வரன் கீழவீதி, கும்பகோணம் | 6200/– |
| 2 | கென்னடி பேட்டரி ஒர்க்ஸ்<br>25பி, காமராஜர் சாலை, கும்பகோணம் | 6500/– |
| 3 | ஸ்ரீஜெயதுர்க்கா பேட்டரி ஒர்க்ஸ்<br>13, உல்லிகான் சந்து, கும்பகோணம் | 6800/– |

**தீர்மான எண்.117**
அலுவலககுறிப்பு ஏற்கப்பட்டது.

**தனி அலுவலர் மற்றும் ஆணையர்**
**கும்பகோணம் நகர்மன்றம்**